Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 143 | உள்ளூர் - 23.05.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 143 | வெளியூர் - 24.05.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**தமிழ்நாடு அரசுப் பணி; 461 காலியிடங்கள்!**

**இழந்த பணம், சொத்துக்கள் திரும்ப எளிய பரிகாரம்!**

**எஸ்.பி.ஐ. வங்கி வேலைநிறுத்தம்!**

**'மாஸ்டர் பிளான்' உடன் டெல்லி செல்லும் முதல்வர்!**

# இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விநியோகம்: சவுதி, அமெரிக்காவை விஞ்சியது வெனிசுலா!

புதுடெல்லி, மே. 23–

உலகளாவிய எரிசக்தி சந்தையில் நிலவும் மாற்றங்களுக்கு மத்தியில், விலை குறைவான வெனிசுலா கச்சா எண்ணெயை இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் அதிக அளவில் கொள்முதல் செய்யத் தொடங்கியுள்ளன.




எரிசக்தி சரக்கு போக்குவரத்து தரவுகளைக் கண்காணிக்கும் 'கெப்ளர்' நிறுவனத்தின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நடப்பு மே மாதத்தில் மட்டும் வெனிசுலாவிடமிருந்து நாள் ஒன்றுக்கு 4.17 லட்சம் பேரல் கச்சா எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

இது கடந்த ஏப்ரல் மாதத்தின் (2.83 லட்சம் பேரல்) அளவை விடப் பெருமளவு அதிகமாகும். கடந்த ஒன்பது மாதங்களாக இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் விநியோகம் செய்யாத நிலையில், தற்போது வெனிசுலாவிடமிருந்து இறக்குமதி கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

மேற்கு ஆசியப் போர் சூழல், ஹார்முஸ் ஜலசந்தியில் ஏற்பட்டுள்ள பதற்றம் ஆகியவற்றால் இந்தியா தனது இறக்குமதி உத்தியை மாற்றி அமைத்துள்ளது.

தற்போது, ரஷ்யா, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அடுத்தபடியாக வெனிசுலாவிடமிருந்து தான் இந்தியா அதிக அளவிலான எண்ணெயை கொள்முதல் செய்கிறது. இவ்வாறு கெப்ளர் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெனிசுலாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி அதிகரிப்புக்கு அதன் விலை தான் முக்கிய காரணம். சர்வதேச சந்தையில் மற்ற எண்ணெய் வகைகளை விட வெனிசுலாவின் கச்சா எண்ணெய் மலிவாகக் கிடைக்கிறது.

# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை மே 27-ல்!

சென்னை, மே. 23–

த.வெ.க. தலைவர் விஜய், முதல்–அமைச்சராக பொறுப்பேற்றவுடன், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்படும் என்று அறிவித்தார். அவருடைய இந்த அறிவிப்பு உடனடியாக அமலுக்கு வந்துவிட்டது. இந்த அதிரடிபடையின் முதல் பெண் ஐ.ஜி.யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த படையில் ஒரு போலீஸ் சூப்பிரண்டு, 2 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும் 4 இன்ஸ்பெக்டர்கள் உள்பட 30–க்கும் மேற்பட்ட போலீசார் நியமிக்கப்பட உள்ளனர். பெண்கள் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள இந்த படைக்கு 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' என்ற பெயரை ஐ.ஜி. பவானீஸ்வ ரிதான் சிபாரிசு செய்துள்ளார். அவருடைய சிபாரிசை ஏற்று, முதல்–அமைச்சர் விஜய் இந்த பெயரை சூட்டியதோடு மட்டுமல்லாமல், பவானீஸ்வரியை இந்த படைக்கு ஐ.ஜி.யாகவும் நியமித்துள்ளார்.




இந்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் தொடக்க விழா வருகிற 27–ந்தேதியன்று (புதன்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது.

இந்த அதிரடிப்படையின் ரோந்து பணிக்காக 30 ரோந்து வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில், முதல்–அமைச்சர் விஜய் கலந்து கொள்கிறார். சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை அவர் தொடங்கி வைக்கிறார். இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகிறார்கள். டி.ஜி.பி. சந்தீப் ராய் ரத்தோர், போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் நேற்று மாலை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கிற்கு சென்று, விழாவுக்கான ஏற்பாடுகளை பார்வையிட்டு முக்கிய ஆலோசனையும் வழங்கினார்கள்.

# மூடப்பட்ட டாஸ்மாக் ஊழியர்களுக்கு மாற்றுப்பணி!

சென்னை, மே. 23–

தமிழகத்தில் தற்போது சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டாஸ்மாக் கடைகள் உள்ள நிலையில், முதல்வராக விஜய் பதவி ஏற்றதும், 717 டாஸ்மாக் கடைகளை மூட தமிழக முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். குறிப்பாக பள்ளி, பேருந்து நிலையம், வழிபாட்டு தளங்களுக்கு 500 மீட்டர் தூரத்திற்குள் உள்ள கடைகளை மூடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 717 கடைகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். அந்த ஊழியர்களுக்கு வேலை இழக்கும் நிலையானது உருவானது இந்த நிலையில் மாற்றுப்பணி வழங்க முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.




இதுதொடர்பாக மதுபான சில்லறை விற்பனை கடைகள் (டாஸ்மாக்) தமிழக அரசாணையின் அடிப்படையில் மூடப்பட்ட மதுபான கடைகளில் பணிபுரியும் சில்லறை விற்பனை பணியாளர்களை பணி நியமனம் தொடர்பாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில், தமிழக அரசு கல்வி நிலையங்கள் பேருந்து நிலையங்கள் வழிபாட்டுத் தலங்கள் அருகே உள்ள 717 கடைகளில் கூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதில் மூடப்பட்ட கடைகளில் பணி புரிந்த கடைப்பணியாளர்களை பணிமூப்பு அடிப்படையில் பட்டியல் தயார் செய்து, மூடப்பட்ட கடைகளுக்கு அருகிலுள்ள மதுபான சில்லறை விற்பனை கடைகளில் விற்பனை கூடுதல் ஏற்படும் மதுபான கடைகளில் மூடப்பட்ட கடைப்பணியாளர்களை பணிமூப்பின் அடிப்படையில் பணிநிரப்பிட செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மூடப்பட்ட கடைப்பணியாளர்களில் எஞ்சிய பணியாளர்களை காலி பணியிடம் உள்ள மதுபான சில்லறை விற்பனை கடைகளில் பணிநிரவல் செய்திடவும், மீதமுள்ள பணியாளர்கள் கையிருப்பில் இருந்தால் அப்பணியாளர்களை கிடங்கு பணிகளிலும் மாவட்ட அலுவலக பணிகளிலும் இப்பணியாளர்களை பணிநிரப்ப செய்திட வேண்டும் என அறிவுறுத்தி அனைத்து மாவட்ட மேலாளர்களுக்கு டாஸ்மாக் நிர்வாகம் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

# ஓதுவார் பயிற்சி வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு ரூ.5,000 ஊக்கத்தொகை! தமிழ்நாடு அரசு அறிவிப்பு..!

சென்னை, மே. 24–

ஓதுவார் பயிற்சி வகுப்பில் சேரும் மாணவர்களுக்கு ரூ.5,000 ஊக்கத் தொகை வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. வடபழனி ஓதுவார் பயிற்சி பள்ளியில் பகுதி நேர வகுப்புக்கில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ரூ.5000 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.ஓதுவார் பயிற்சியில் சேர ஜூன் 18ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. எனவே, தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் ஓதுவார் பயிற்சி பள்ளியில் சேர்ந்து ஊக்கத்தொகை பெறலாம். . மேலும், hrce.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். ஏதேனும் சந்தேகம் இருந்தால் 8939083753, 9047810365 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.




# கோவை சிறுமி படுகொலை: சம்பவ இடத்தில் ஏடிஜிபி...!

## தலைவர்கள் கண்டனம்!!



கோவை, மே. 23–

கோவை அருகே சூலூரை அடுத்த ஒரு கிராமத்தை சேர்ந்த 10 வயது சிறுமி, தனது பெற்றோருடன் வசித்து வந்தார். அந்த சிறுமி கடைக்கு சென்றார். பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் சிறுமியை பெற்றோர் மற்றும் உறவினர் அக்கம்பக்கத்தில் தேடியும் கிடைக்கவில்லை. இந்தநிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த 2 பேர் சிறுமியை கடத்திச்சென்றதாக கூறப்பட்டது.

**முட்புதரில் சிறுமி உடல்**

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர், சூலூர் போலீசில் புகார் செய்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். மேலும் அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர். இதற்கிடையே சூலூர் அருகே கண்ணம்பாளையம் குளத்தின் கரையோரம் முட்புதரில் ஒரு சிறுமியின் உடல் கிடப்பதாக சூலூர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. உடனே போலீசார் விரைந்து சென்று, அந்த சிறுமியின் உடலை மீட்டனர். தகவல் அறிந்த மேற்கு மண்டல ஐ.ஜி. ரம்யாபாரதி, கோவை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பவன்குமார் ரெட்டி மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினார்கள். மோப்பநாயும் வரவழைக்கப்பட்டது. அது சம்பவ இடத்தில் இருந்து சிறிது தூரம் ஓடியது. ஆனால் யாரையும் கல்விப்பிடிக்கவில்லை.

**உறவினர்கள் போராட்டம்**

இதைத்தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில், அந்த சிறுமி தான் காணாமல் போனவர் என்பதும், அவரை 2 பேர் கடத்திச்சென்று கொலை செய்து உடலை முட்புதரில் வீசிச்சென்றதும் தெரியவந்தது. போலீசார் அந்த சிறுமியின் உடலை பிரேத பரிசோதனைக்காக சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

சிறுமியை கடத்தி சென்றவர்கள் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்துவிட்டு உடலை முட்புதரில் வீசியதாக தகவல் பரவியது. இதனால் ஆத்திரம் அடைந்த சிறுமியின் உறவினர்கள் சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த சிங்காநல்லூர் மற்றும் சூலூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது சிறுமியின் சாவுக்கு காரணமான நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகி றார்கள். இதற்கிடையே சிறுமி பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்ததாக கூறி சிறுமியின் உறவினர்கள் சூலூர் போலீஸ் நிலையம் முன்பு திரண்டனர். பின்னர் அவர்கள் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். இதில் ஆத்திரம் அடைந்த சிலர் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்நிலையில், சிறுமி கொலை தொடர்பாக கார்த்திக் என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவரது நண்பர் மோகன் ராஜ் என்பவரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர். கொலை செய்யப்பட்ட சிறுமியின் எதிர்வீட்டை சேர்ந்த கார்த்திக் போலீசார் விசாரணையில் உண்மையை ஒத்துக்கொண்டார். தோட்டத்திற்கு அழைத்து சென்று சிறுமியை வன்கொடுமை செய்து கொன்றதாக அவர் தெரிவித்தார். கார்த்திக் அளித்த தகவலின் பேரில் மோகன்ராஜையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**போலீசார் குவிப்பு**

சூலூர் காவல் நிலையம் முன் காவல் துறையினர் குவிக்கப்பட்டு உள்ளனர். சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டதை அடுத்து அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. சிறுமியின் உறவினர்கள் காவல்நிலையத்தை முற்றுகையிடலாம் என்பதால் முன் எச்சரிக்கையாக போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

**ஏடிஜிபி ஆய்வு**

ஏரிக்கரையில் இருந்து சிறுமியின் உடல் மீட்கப்பட்டது. அந்த இடத்தில் ஏடிஜிபி மகேஷ்வர் தயாள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார், இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கு சென்று, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். அவருடன் கோவை மாவட்ட கலெக்டர் பவன்குமார், சூலூர் எம்.எல்.ஏ. சுகுமார் ஆகியோரும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிலையில், சிறுமியின் உடலை கூராய்வு செய்யும் பணி தொடங்கியது. கோவை இஎஸ்ஐ மருத்துவமனையில் உடல் கூராய்வு செய்யப்படுகிறது. கூராய்வுக்கு பின்னரே கொலையின் காரணம் தெரிய வரும்.

**தலைவர்கள் கண்டனம்**

இந்த சம்பவத்திற்கு எடப்பாடி, உதயநிதி ஸ்டாலின், அண்ணாமலை மற்றும் பல அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

# திருச்சி செவிலிய மாணவி உயிரிழப்பு: விசாரணைக்குழு அமைத்தது தமிழக சுகாதாரத்துறை!

திருச்சி, மே. 24–

திருச்சி அரசு மருத்துவ மருத்துவமனையில் புதுக்கோட்டைய சேர்ந்த பயிற்சி செவிலிய மாணவி சீதாலட்சுமி, மூக்கு வலி என அனுமதிக்கப்பட்ட நிலையில், தவறான சிகிச்சையால் உயிரிழந்ததாக சக மாணவிகள் புகார் எழுப்பியுள்ளனர்.

தவறான சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி செவிலியர்கள் காலை முதலே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




அதிகளவில் மயக்க மருந்து கொடுத்ததால்தான் மாணவி இறந்ததாக, சக மாணவியின் மரணத்திற்கு நீதி கேட்டு சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுட்ட செவிலியர் மாணவிகளிடம் அமைச்சர் ரமேஷ் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, செவிலிய மாணவி மரணம் தொடர்பாக சிறப்பு குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படும் என அமைச்சர் ரமேஷ் செவிலிய மாணவிகளிடம் உறுதி அளித்தார்.

மேலும் அவர்,'' திருச்சி அரசு மருத்துவமனையில் மாணவிக்கு அளித்த சிகிச்சையில் தவறு நடந்து இருந்தால் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். மாணவிகளின் புகார்களை எழுதி வாங்கி இருக்கிறோம். தற்காலிக நடவடிக்கைக்கு பிரந்துறை செய்யப்படும்'' என்றார்.

பின்னர், அமைச்சர் ரமேஷ் கொடுத்த வாக்குறுதியை ஏற்று சாலை மறியலில் ஈடுபட்ட செவிலிய மாணவிகள் போராட்டத்தை கைவிட்டனர். இந்நிலையில், திருச்சி அரசு மருத்துவமனையில் செவிலிய மாணவி உயிரிழந்த விவகாரத்தில் தமிழக சுகாதாரத்துறை விசாரணைக்குழு அமைத்துள்ளது. புகார் குறித்து விசாரிக்க மருத்துவர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளர் பாஸ்கர் தலைமையில் 3 மருத்துவர்கள் அடங்கிய குழு நியமனம் செய்யப்பட்டுள்ளன.

த தலையங்கம்

மதுரை மணி

சனிக்கிழமை 23.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 09-ம் தேதி


## தங்கப் பத்திரங்களை விற்க கடைசி வாய்ப்பா? ரகசிய முதலீட்டு உத்திகள்!




குறிப்பிட்ட சாவரின் கோல்டு பாண்ட் (SGB) தவணைகளை முன்கூட்டியே திரும்பப் பெறுவதற்கான கடைசி வாய்ப்பு முடிகிறது. சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தங்கம் விலை கடும் ஏற்ற இறக்கத்தைச் சந்தித்து வரும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. முதலீட்டாளர்கள் இப்போதே வெளியேறி லாபத்தைப் பார்ப்பதா அல்லது நீண்ட கால ஆதாயத்திற்காகக் காத்திருப்பதா என்பதை விரைவாக முடிவு செய்ய வேண்டும். குறிப்பாக, 5 ஆண்டு லாக்–இன் காலத்தை நெருங்கும் பாண்டுகளை வைத்திருப்பவர்களுக்கு இது மிக முக்கியமான தருணம். பாண்டுகளைத் தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது பணமாக்குவதா என்பதை தற்போதைய சந்தை நிலவரம் மற்றும் வரி விதிகளைப் பொறுத்தே முடிவு செய்ய வேண்டும். இந்த பாண்டுகள் ஆண்டுதோறும் வட்டி வழங்கினாலும், தங்கம் விலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் சிலரை முன்கூட்டியே வெளியேறத் தூண்டலாம். ஆனால், முதிர்வு காலம் வரை காத்திருந்தால் மூலதன ஆதாய வரி (Capital Gains Tax) முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும்.

இந்த மிகப்பெரிய வரிச் சலுகையானது, அவசரத் தேவைக்காக இப்போது பணமாக்குவதை விட அதிக லாபத்தைத் தரக்கூடியது. உங்கள் ₹10,000 முதலீட்டிற்கு கோல்டு இடிஎஃப் (ETF) மற்றும் தங்கப் பத்திரம் (SGB) – ஒரு ஒப்பீடு உங்களிடம் ₹10,000 முதலீடு செய்யத் தயாராக இருந்தால், கோல்டு இடிஎஃப் (Gold ETF) சிறந்த தேர்வாக இருக்கும். இதில் பணப்புழக்கம் அதிகம். தங்கப் பத்திரங்களைப் போலன்றி, இவற்றை பங்குச் சந்தை நேரங்களில் எப்போது வேண்டுமானாலும் விற்று உடனடியாகப் பணமாக்கிக் கொள்ளலாம். மற்றொரு சிறந்த வழி, கோல்டு ஃபண்டுகளில் சிப் (SIP) முறையில் முதலீடு செய்வது. இது சந்தை ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் அபாயத்தைக் குறைத்து, சிறு முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பான லாபத்தை உறுதி செய்யும்.

முதலீட்டு முறை வரி விதிப்பு பணப்புழக்கம் தங்கப் பத்திரம் (SGB) முதிர்வின் போது வரி இல்லை குறைவு தங்கம் இடிஎஃப் (ETF) வருமான வரி உண்டு மிக அதிகம் முதலீட்டாளர்கள் வரிச் சலுகை மற்றும் பணப்புழக்கம் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு தங்கள் முதலீடுகளைத் திட்டமிட வேண்டும். தங்கம் விலை தற்போது நிலையற்றதாக இருப்பதால், இப்போதைக்கு மொத்தமாகப் பெரிய தொகையை முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். ரிசர்வ் வங்கியின் (RBI) அறிவிப்புகளைத் தொடர்ந்து கவனித்து, அங்கீகரிக்கப்பட்ட தளங்கள் மூலம் மட்டுமே முதலீடு செய்யுங்கள். இத்தகைய ஒழுங்குமுறை கலந்த முதலீடு, வரிச் சுமையின்றி உங்கள் பணத்தை சீராக வளர்க்க உதவும். இன்றைய சரியான திட்டமிடல் உங்கள் குடும்பத்தின் எதிர்கால நிதிப் பாதுகாப்பிற்கு வலுசேர்க்கும்.



## சினிமா துளிகள்..!

### ஜனநாயகன் படம் வெளியான விவகாரம்: 9 பேர் ஜாமீன் கேட்ட மனுக்கள் தள்ளுபடி!!



நடிகர் விஜய் உள்ளிட்டோர் நடித்துள்ள 'ஜனநாயகன்' திரைப்படம் தணிக்கை வாரியத்தின் மறு ஆய்வுக்குழு முன்பு ஆய்வில் உள்ளது. இந்தநிலையில், இந்த திரைப்படம் கடந்த மாதம் சட்டவிரோதமாக இணையதளத்தில் வெளியானது. இதுகுறித்து படத்தை தயாரித்த கே.வி.என். புரொடெக்ஷன் நிறுவனம் அளித்த புகாரின் அடிப்படையில் 21 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஸ்ரீநாத், சஞ்சய், பாலகிருஷ்ணன், மணிகண்டன், ருத்ரன், ராஜேஷ், பிரசாந்த், செல்வம், ரஜினி ஆகியோர் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுக்களை சென்னை மாவட்ட செசன்சு கோர்ட்டு தள்ளுபடி செய்தது.இதையடுத்து, இந்த 9 பேர் சார்பிலும் சென்னை ஐகோர்ட்டில் ஜாமீன் கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் நீதிபதி ஆர்.சக்திவேல் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது படத்தயாரிப்பு நிறுவனம் சார்பில் ஆஜரான வக்கீல் விஜயன் சுப்பிரமணியன், ஜாமீன் கோரியுள்ள 9 பேரில், பிரசாந்த், செல்வம் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகிய மூன்று பேர் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, 9 பேரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# 'மாஸ்டர் பிளான்' உடன் டெல்லி செல்லும் முதல்வர்!




சென்னை, மே. 23–

கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27–ந் தேதி நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்தனர். இது தொடர்பான விசாரணைக்காக கடந்த ஜனவரி மாதம் 12 மற்றும் 19–ந் தேதிகளில் டெல்லி சி.பி.ஐ. முன்பு த.வெ.க. தலைவர் விஜய் ஆஜரானார்.

அன்றைக்கு ஒரு கட்சியின் தலைவராக டெல்லி சென்ற விஜய், தற்போது தமிழகத்தின் முதல்–அமைச்சராக மீண்டும் 'மாஸ் எண்ட்ரி' கொடுக்க இருக்கிறார். இந்த பயணத்தின்போது, பிரதமர் நரேந்திரமோடி, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, காங்கிரஸ் தலைவர்கள் சோனியாகாந்தி, ராகுல்காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரை முதல்–அமைச்சர் விஜய் சந்தித்து பேச இருக்கிறார்.

ஏற்கனவே, பிரதமர் மோடியை சந்தித்து பேச பிரதமர் அலுவலகத்தில் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. ஆனால், தொடர்ச்சியாக பிரதமர் மோடி, அரசு நிகழ்ச்சிகளிலும், கட்சிப் பணிகளிலும் பங்கேற்று வருவதால் இன்னும் நேரம் ஒதுக்கப்படவில்லை என்று தெரிகிறது. நேரம் கிடைத்ததும் உடனடியாக முதல்–அமைச்சர் விஜய் டெல்லி செல்ல இருக்கிறார். அதே நேரத்தில், டெல்லி பயணத்தின்போது, வெறும் அரசியல் ரீதியான சந்திப்புகள் மட்டுமின்றி, தமிழகத்தின் மிக முக்கிய பொருளாதார தேவைகள் தொடர்பாகவும் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கும் வகையில், மாஸ்டர் பிளானுடன் முதல்–அமைச்சர் விஜய் செல்கிறார்.

கடந்த வாரம் தமிழகத்தின் நிதி நிலைமை தொடர்பாக, நிதித் துறை உயர் அதிகாரிகளுடன் முதல்–அமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தினார். அப்போது, தி.மு.க. ஆட்சி காலத்தில் ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியை சமாளிப்பதுதான் பெரிய சவாலாக இருக்கும் என்பது அவருக்கு தெரியவந்தது.

நிதி நெருக்கடியை சமாளிக்க, மத்திய அரசுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிப்பதுதான் சரியாக இருக்கும் என்று அதிகாரிகள் முதல்–அமைச்சர் விஜய்யிடம் தெரிவித்துள்ளனர். ஆனால் அவரோ, "மத்திய அரசைச் சார்ந்திருக்காமல், இந்த நிதிச் சிக்கலைத் தீர்க்க மாற்று வழிகள் எதுவும் இல்லையா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். அதற்குப் பதிலளித்த நிதித்துறை அதிகாரிகள், "தற்போது 2026–2027–ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தயார் செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எனவே, குறுகிய காலத்திற்குள் மாற்று வழிகளைக் கண்டறிந்து நிதி திரட்டுவது என்பது உடனடியாகச் சாத்தியமில்லை. மத்திய அரசிடம் இருந்து நிதிகளை பெறுவதே சரியானதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளனர்.

அதனை முதல்–அமைச்சர் விஜய்யும் ஏற்றுக்கொண்டதாக தெரிகிறது. அதன் அடிப்படையில், பிரதமர் நரேந்திரமோடியுடனான சந்திப்பின்போது, தமிழகத்திற்கு தேவையான கோரிக்கைகளை கேட்டுப்பெறுவது தொடர்பாக பட்டியல் தயாரிப்பது குறித்த ஆரம்பகட்டப் பணிகள் தொடங்கிவிட்டன.

ஒருபுறம் பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித்ஷாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினாலும், மற்றொரு புறம் காங்கிரஸ் தலைவர்கள் சோனியாகாந்தி, ராகுல்காந்தி மற்றும் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரையும் முதல்–அமைச்சர் விஜய் சந்தித்து பேச இருக்கிறார். டெல்லி வருகை குறித்து ராகுல்காந்தியிடம் தொலைபேசி மூலம் விஜய் தகவல் தெரிவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

# மே 25 முதல் கால்நடை மருத்துவப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்...!




கோவை, மே. 23–

மே 25–ந்தேதி முதல் கால்நடை மருத்துவப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல்பல்கலைக்கழகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கால்நடை மருத்துவ படிப்புகளில் சேர மே 25–ந்தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இணையதள விண்ணப்ப வழிமுறைகள் மற்றும் இதர விவரங்கள் https://adm.tanuvas.ac.in என்ற இணையதளத்தில் சென்று அறிந்து கொள்ளலாம். இதுகுறித்து தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு https://adm.tanuvas.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளம் மூலம் 25–ந்தேதி காலை 10 மணி முதல் அடுத்த மாதம் (ஜூன்) 17–ந்தேதி மாலை 5 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

அயல்நாடு வாழ் இந்தியர், அயல்நாடு வாழ் இந்தியர்களின் குழந்தைகள், அயல்நாடுவாழ் இந்தியரின் நிதி ஆதரவு பெற்றோர் மற்றும் அயல்நாட்டினர் ஆகியோர்களுக்கான இடஒதுக்கீடு, இணையதள விண்ணப்ப வழிமுறைகள் மற்றும் இதர விவரங்கள் https://adm.tanuvas.ac.in என்ற இணையதளத்தில் சென்று அறிந்து கொள்ளலாம். மேற்கண்ட தகவல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக சேர்க்கைக் குழு (இளநிலை பட்டப்படிப்பு) தலைவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கட்டுப்பாட்டில், நான்கு அரசு கால்நடை மருத்துவ கல்லூரிகள் உள்ளன. மேலும் பல தனியார் கல்லூரிகளும் உள்ளன. இந்தக் கல்லூரிகளில் ஐந்தரை ஆண்டுகள் கொண்ட கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்புப் படிப்பு (பி.வி.எஸ்சி. ஏ.ஹெச்) மற்றும் நான்கு ஆண்டுகள் கொண்ட உணவுத் தொழில்நுட்பப் பட்டப்படிப்பு (பி.டெக்), பால்வளத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு (பி.டெக்), கோழியின தொழில்நுட்பப் பட்டப்படிப்பு (பி.டெக்) ஆகியவை உள்ளன.

கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்புப் படிப்புகளுக்கு 360 இடங்களில் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு 54 இடங்கள் (15 சதவீதம்) போக மீதமுள்ள 306 இடங்கள் மாநில அரசுக்கு உள்ளன.

பி.டெக் படிப்புகளுக்கு மொத்தம் 100 இடங்கள் உள்ளன. இதில் உணவுத் தொழில்நுட்ப படிப்பில் 40 இடங்களில் 6 இடங்கள் (15 சதவீதம்) இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு புதிதாக சேலம் தலைவாசல், தேனி வீரபாண்டி, உடுமைப்பேட்டையில் தலா 40 இடங்களுடன் மூன்று கல்லூரிகள் செயல்பட தொடங்குகின்றன. அப்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையானது பிளஸ்2 மதிப்பெண் அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இதற்கான விண்ணப்பம் விநியோகம் வரும் 25ந்தேதி தொடங்குகிறது.

# கடற்கரைக்கு செல்ல வேண்டாமென எச்சரிக்கை!



சென்னை, மே. 23–

சென்னையில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தியது. பகல் நேரங்களில் அனல் காற்று வீசியதால், மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கி கிடந்தனர். கடுமையான வெயிலின் தாக்கத்தால் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். இப்படி கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில், திடீரென இன்று சென்னையின் பல்வேறு பகுதிகளில் பலத்த காற்று வீசியது. குறிப்பாக மெரினா கடற்கரையில் புழுதிக்காற்று வீசியது. இதனால் காலையில் நடைபயிற்சிக்கு வந்திருந்த மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர்.

தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் காற்று வீசி வருகிறது. கடல் வழக்கத்துக்கு மாறாக சீற்றமாக உள்ளதால் மெரினா கடற்கரைக்கு யாரும் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் காலை முதலே வெயிலின் தாக்கம் இல்லை. வானம் சற்று மேகமூட்டமாக உள்ளது. காற்றும் வீசி வருவதால் தற்போது சென்னையில் இதமான சூழல் உள்ளது. இதற்கிடையே சென்னையில் மதியம் 1 மணி வரை மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நாமக்கல் மாவட்டத்தில் 22 தனியார் பள்ளிகளுக்கு மாணவர் சேர்க்கைக்கு தடை!




நாமக்கல், மே. 23–

நாமக்கல் மாவட்டத்தில் 22 தனியார் பள்ளிகளுக்கு, மாணவர் சேர்க்கைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து, மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 237 தனியார் பள்ளிகள் அரசு அனுமதியுடன் செயல்படுகிறது. இவற்றில் 22 பள்ளிகள் சட்டப்படி உரிய அனுமதியின்றி செயல்பட்டு வந்தன. இப்பள்ளிகளுக்கு ஏற்கனவே நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும், அவர்கள் அனுமதி பெறுவதற்காக உரிய முறையில் விண்ணப்பிக்கவில்லை.

எனவே மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு உறுதியற்ற தன்மை ஏற்படுவதால் நடப்பு 2026–2027 கல்வியாண்டு முதல் எக்காரணம் கொண்டும் இப்பள்ளிகள் செயல்படக்கூடாது எனவும், எல்.கே.ஜி. முதல் எந்தவொரு வகுப்பிலும் மாணவர் சேர்க்கை நடைபெறக்கூடாது எனவும் பள்ளி நிர்வாகத்தினருக்கு தெரிவிக்கப்படுகிறது. அறிவிப்பிற்கு மாறாக மாணவர்கள் சேர்க்கப்பட்டு பள்ளி செயல்பட்டால், சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பெற்றோர்கள் இந்த பள்ளிகளில் மாணவ மாணவிகளை சேர்க்க வேண்டாம். அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் மட்டும் தங்கள் குழந்தைகளை சேர்க்கவேண்டும். இது குறித்த சந்தேகங்களுக்கு நாமக்கல் மாவட்ட சிஇஓ ஆபீஸ் செல்போன் எண். 73730 02791, தனியார் பள்ளிகளுக்கான டிஇஓ அலுவலகம் தொலைபேசி எண். 04286 293981 மூலம் கேட்டு தெரிந்துகொள்ளலாம். நாமக்கல் மாவட்டத்தில் அனுமதி பெறாமல் செயல்பட்டதால், சேர்க்கைக்கு தடை விதிக்கப்பட்ட தனியார் பள்ளிகள்:

நாமக்கல் டைம் கிட்ஸ் நர்சரி ஸ்கூல், ஏபிசி கிட்ஸ், ஹனி பனி கிட்ஸ், ஆரஞ்சு அகாடமி, சன் பிளவர், அக்ஸ்ரம், ஸ்பார்க்கில் அகாடமி, யுரோ கிட்ஸ், மகிழம், துளிர், ஸ்கூல் ஆப் மாண்ட்டசரி, செல்லப்பம்பட்டி ஸ்மைலிஸ் வித்யாஷ்ரமம், எர்ணாபுரம் ஆல்பாபெட்ஸ் பிரி ஸ்கூல், நல்லிபாளையம் தீக்ஷா விஷனரி பள்ளி, சேந்தமங்கலம் துலிப் கார்டன் நர்சரி பள்ளி, பொத்தனூர் ஆப்பிள் நர்சரி பள்ளி, எருமப்பட்டி காவேரி மழலையர் பள்ளி, பள்ளிபாளையம் கோல்டன் நர்சரி பள்ளி, கலைவாணி நர்சரி பள்ளி, எவர்கிரீன் இண்டர்நேசனல் நர்சரி பள்ளி, பவித்திரம் எஸ்.எம்.எஸ் நர்சரி பள்ளி, என்.கந்தம்பாளையம் காந்தி சிபிஎஸ்இ பள்ளி ஆகிய 22 பள்ளிகளில் பொதுமக்கள் யாரும் தங்கள் குழந்தைகளை சேர்க்க வேண்டாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.



# இழந்த பணம், சொத்துக்கள் திரும்ப கிடைக்க செய்ய வேண்டிய எளிய பரிகாரம்!



சிலருக்கு அவசரத்திற்கு உதவி செய்து விட்டு, பிறகு அவமதிபடுபவர்கள் பலரும் உண்டு. பணத்தை கொடுத்து விட்டு, அவர்களிடம் இருந்து திரும்ப வாங்க முடியாமல் படாதபாடு பட்டு, அதன் காரணமாக பல சிக்கல்களை, சிரமங்களை எதிர்கொண்ட அனுபவம் பலருக்கும் ஏற்பட்டிருக்கும். அப்படி கொடுத்த பணம் திரும்ப கிடைக்காத என ஏங்குபவர்கள் சில எளிய பரிகாரங்கள் மூலம் தங்களின் பிரச்சனைக்கு தீர்வினை பெற முடியும்.

இந்த பரிகாரத்தை வீட்டிலேயே கூட செய்து, பலன் பெற முடியும். நினைத்த காரியம் நிறைவேறும் வரை விடாமல், நம்பிக்கையுடன் இந்த பரிகாரங்களில் ஏதாவது ஒன்றை தொடர்ந்து செய்து வர வேண்டும்.

**இழந்த பொருள் மீண்டும் கிடைக்க :**

பலர் பழக்கத்தின் காரணமாக அல்லது நம்பிக்கையின் பேரிலோ அல்லது இரக்கப்பட்டோ எந்த வித ஆதாரமும் இல்லாமல் சிலருக்கு பணம் கொடுத்திருக்கலாம். ஆனால் பணம் வாங்கி நபர் அதை திருப்பி தராமல் ஏமாற்றி இருக்கலாம். இது போல் நமக்கு சேர வேண்டிய சொத்து, நகை போன்றவற்றை தராமல் ஏமாற்றி இருக்கலாம். வேலை வாங்கித் தருவதாக கூறி பணம் வாங்கி ஏமாற்றி இருக்கலாம்.

நாமும் நமக்கு சேர வேண்டிய பணம், நகை, சொத்து போன்றவற்றை திரும்பப் பெறுவதற்கு பல காலமாக பல வழிகளிலும் முயற்சி செய்து, இனி அது நமக்கு திரும்ப கிடைக்கவே கிடைக்காது என நம்பிக்கை இழந்து, முயற்சியை கை விட்டிருக்கலாம். அப்படி பணம், பொருள், நகை, சொத்து, வேலை ஆகியவற்றை இழந்தவர்கள், இழந்தவற்றை திரும்பப் பெறுவதற்கு சில எளிய பரிகாரங்களை செய்தாலே போதுமானது.

**இழந்த பணத்தை பெற பரிகாரம் :**

புதன் கிழமை வரும் பிரதமை திதி மற்றும் நவமி திதி நாட்களில் அருகில் உள்ள சிவன் கோவிலுக்கு சென்று, அங்குள்ள சண்டிகேஸ்வரருக்கு வில்வ மாலை சாத்தி, நாம் இழந்த பொருள் அல்லது பணம் அல்லது நகை திரும்ப கிடைக்க வேண்டும் என நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்ள வேண்டும். சண்டிகேஸ்வரர் என்பவர் சிவ பெருமானின் அம்சமாக விளங்கக் கூடியவர். இவரே சிவ ஆலயங்களில் காவல் தெய்வமாக விளங்கக் கூடியவர். சிவன் கோவிலுக்கு வருபவர்களில் யார் என்ன கொண்டு வருகிறார்கள், என்ன எடுத்துச் செல்கிறார்கள் என்பதை கணக்கில் வைத்துக் கொள்ளக் கூடியவர் இவர் தான்.

**சண்டிகேஸ்வரர் :**

சிவன் சொத்து குல நாசம் என்பார்கள். அதனால் தான் சிவனின் அருளை தவிர, சிவனின் சொத்து எதையும் நான் எடுத்துச் செல்லவில்லை என சண்டிகேஸ்வரரிடம் வெறும் கையை காட்டி விட்டு வர வேண்டும் என்பார்கள். ஆனால் காலப் போக்கில் இந்த வழக்கம் மாறி, சண்டிகேஸ்வரருக்கு காது கேட்காது. அதனால் கை தட்டி கூப்பிட்டு வணங்கி விட்டு வர வேண்டும் என தவறான அர்த்தமாக மாறி விட்டது.

இழந்த பணம், சொத்து அல்லது பொருள் திரும்ப கிடைக்கும் வரை தொடர்ந்து இந்த பரிகாரத்தை செய்து வர வேண்டும். நம்பிக்கையுடன் சண்டிகேஸ்வரரை பிரார்த்தனை செய்து வந்தால் இழந்த பொருட்கள் திரும்ப கிடைக்கும். கர்மா மற்றும் வினை பயனின் காரணமாகவே பணம், பொருள் இழப்பு போன்றவை ஏற்படுகிறது. இறைவனின் அருளால் அவை நீங்கும் போது நிச்சயம் இழந்த பொருட்கள் மீண்டும் கிடைக்கும்.

**வெற்றிலை பரிகாரம் :**

மற்றொரு பரிகாரமாக, வீட்டிலேயே பூஜை அறையில் விளக்கேற்றி வைத்து, சுவாமி படத்திற்கு எதிராக அமர்ந்து கொள்ள வேண்டும். ஒரு வெற்றிலையை எடுத்துக் கொள்ள வேண்டும். சிறிது மஞ்சள் தூளை தண்ணீரில் கரைத்து, அந்த வெற்றிலையில் உங்களுக்கு பணம் அல்லது சொத்து அல்லது நகையை திருப்பி தர வேண்டியவரின் பெயர் மற்றும் அவர் தர வேண்டிய தொகை ஆகியவற்றை எழுதி, சீக்கிரம் திருப்பி தர வேண்டும் என எழுதி, ஏற்றி வைத்த விளக்கிற்கு முன்பு வைத்து விடுங்கள். கண்களை மூடி, குல தெய்வத்தை நன்கு பிரார்த்தனை செய்து கொண்டு, உங்களின் வேண்டுதலை குல தெய்வத்திடம் மனமுருக வேண்டிக் கொள்ளுங்கள்.


**பணத்தை மீட்க பரிகாரம் :**

மஞ்சளில் பெயர் எழுதிய வெற்றிலை ஒரு நாள் முழுவதும் அப்படியே இருக்கட்டும். அடுத்த நாள் அந்த வெற்றிலையை எடுத்து மஞ்சள் நூலால் சுற்றி, ஆறு, குளம், கிணறு என ஏதாவது ஒரு நீர்நிலையில் போட்டு விடுங்கள். நீர் நிலைகளில் போட வாய்ப்பு இல்லாதவர்கள், கால் படாத இடத்தில் போட்டு விட வேண்டும். அந்த காரணத்தை கொண்டும் சாக்கடை அல்லது கழிவுநீர் செல்லும் பாதையில் போட்டு விடக் கூடாது. இந்த பரிகாரத்தை பிரம்ம முகூர்த்த வேளை அல்லது சூரிய உதயத்திற்கு முன்பாக செய்வது மிகவும் சிறப்பானது. வெற்றிலை என்பது வெற்றியை தரக் கூடிய இலையாகும். அதனால் நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்து கொண்டு, பணத்தை திரும்ப பெறுவதற்கான முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டால், நிச்சயம் பலன் கிடைக்கும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### வெயிலில் வெளியே செல்கிறீர்களா? இந்த 5 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கட்டாயம்..



நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது.. சுட்டெரிக்கும் வெயிலின் காரணமாக மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறவே அஞ்சுகின்றனர். இருப்பினும், சில சமயங்களில் அவர்கள் அவசரமாக வெளியே செல்ல வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இந்நிலையில், நீங்கள் வெயிலில் வெளியே செல்ல நேர்ந்தால், ஐந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அவசியம் பின்பற்ற வேண்டும்.

நீங்கள் வெயிலில் வெளியே செல்கிறீர்கள் என்றால், கண்டிப்பாக ஒரு தண்ணீர் பாட்டிலை உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும். அதேபோல், உங்கள் உடல் எப்போதும் நீர்ச்சத்துடன் இருக்க, வெளியே கிளம்புவதற்கு முன்பே போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். இது உடலில் ஏற்படும் நீர் வற்றல் (dehydration) பிரச்சனையைத் தடுக்கவும் உதவுகிறது. மேலும், 'O.R.S.' (வாய்வழி நீர்ச்சத்துக் கரைசல்) பானம் அருந்துவது உங்கள் உடல்நலத்திற்கு இன்னும் சிறந்தது.

தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களிலிருந்து உங்கள் உடலைப் பாதுகாக்க, 'சன்ஸ்கிரீன்' (Sunscreen) எனப்படும் சூரியக் கதிர் தடுப்பு லோஷனைப் பயன்படுத்துவது மிக அவசியம். குறிப்பாக, நீங்கள் வெளியே கிளம்புவதற்கு 20 முதல் 30 நிமிடங்களுக்கு முன்பே சன்ஸ்கிரீனைப் பூசுவது, சருமப் பிரச்சனைகளைக் குறைக்க உதவும். இது சருமம் கருமையாவதைத் தடுக்கிறது, வயது முதிர்வுப் புள்ளிகள் தோன்றுவதைக் குறைக்கிறது, மேலும் சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்திருக்க உதவுகிறது. இருப்பினும், சன்ஸ்கிரீனை முகத்திற்கு மட்டுமல்லாமல், காதுகள், கழுத்து, கைகள் மற்றும் கால்களுக்கும் பூசுவது எப்போதும் சிறந்தது.

பலரும் அடர் நிறத்திலான ஆடைகளை அணியும் வழக்கம் கொண்டுள்ளனர். ஆனால், கோடைக்காலத்தில் அடர் நிற ஆடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக, கருப்பு நிற ஆடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், மிகவும் இறுக்கமான ஆடைகளை அணிவது, உடலில் வியர்வை தேங்காமல் வெளியேறத் தடையாக இருந்து, பல்வேறு உடல்நலப் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, நீங்கள் வெயிலில் வெளியே செல்கிறீர்கள் என்றால், சற்று தளர்வான மற்றும் வெளிர் நிறத்திலான ஆடைகளை அணிவதே சிறந்தது; இயன்றால், வெள்ளை நிற ஆடைகளை அணியலாம். இவ்வகை ஆடைகள் உடலை எப்போதும் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.

அதிக நீர்ச்சத்து கொண்ட பழங்களையும் நீங்கள் தவறாமல் உண்ண வேண்டும். இவை உடலில் உள்ள நீர்ச்சத்தின் அளவை அதிகரிக்கச் செய்து, உடலை நீர்ச்சத்துடன் வைத்திருக்க உதவுகின்றன. வெள்ளரிக்காய், முள்ளங்கி, ஆரஞ்சு, தர்பூசணி, முலாம்பழம் மற்றும் எலுமிச்சை போன்றவற்றை உங்கள் அன்றாட உணவில் தவறாமல் சேர்த்துக்கொள்ளுங்கள். மேலும், நீங்கள் உண்ணும் உணவோடு குறைந்தது ஒரு கைப்பிடியளவு தயிரையாவது சேர்த்துக்கொள்ள மறக்காதீர்கள்.

மிகவும் அவசரமான சூழலில் நீங்கள் வெயிலில் வெளியே செல்ல நேர்ந்தால், உங்கள் பையில் கண்டிப்பாக ஒரு தண்ணீர் பாட்டில், பருத்தித் துணி, வெயிலுக் கண்ணாடி (sunglasses), தொப்பி அல்லது குடை, மற்றும் பழங்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.




2026-27 ஆம் ஆண்டு கல்லூரி சேர்க்கை

| | பல்கலைக்கழகம் | வலைதளம் | விண்ணப்பிக்க இறுதி நாள் |
|---|---|---|---|
| 1 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி | www.tngasa.in | 29.05.2026 |
| 2 | அரசு மற்றும் தனியார் பொறியியல் சேர்க்கை | www.tneaonline.org | 02.06.2026 |
| 3 | அரசு மற்றும் தனியார் வேளாண் பல்கலைக்கழக சேர்க்கை | www.tnau.ucanappaly.com | 08.06.2026 |
| 4 | அரசு மீன்வள பல்கலைக்கழக சேர்க்கை | admission.tnjfu.ac.in | 14.06.2026 |
| 5 | அரசு சட்ட பல்கலைக்கழக சேர்க்கை | www.tndalu.ac.in | 05.06.2026 |
| 6 | அண்ணாமலை பல்கலைக்கழக சேர்க்கை | www.annamalaiuniversity.ac.in | 16.06.2026 |
| 7 | அரசு கவின் கலை பல்கலைக்கழக சேர்க்கை | www.artandculture.tn.gov.in | 08.06.2026 |
| 8 | அரசு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சேர்க்கை | www.tnpesuonline.in | 06.06.2026 |
| 9 | அரசு பாலிடெக்னிக் டிப்ளமோ சேர்க்கை | www.tnpoly.in | 25.05.2026 |
| 10 | வேளாண் பல்கலைக்கழக டிப்ளமோ சேர்க்கை | www.tnau.ucanapply.com | 08.06.2026 |
| 11 | அரசு தோட்டக்கலை டிப்ளமோ சேர்க்கை (மாதவரம், கிருஷ்ணகிரி, திண்டுக்கல்) | www.tnau.ucanapply.com | 08.06.2026 |
| 12 | தமிழ்நாடு அரசு ITI சேர்க்கை | www.skilltraining.tn.gov.in | 03.06.2026 |
| 13 | அண்ணாமலை பல்கலைக்கழக சேர்க்கை (B.Pharm, Pharm.D, M.Pharm, D.Pharm) | www.annamalaiuniversity.ac.in | 16.06.2026 |


# பழனியில் அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!



பழனி, மே. 23–

பழனியில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் முன்னாள் எம்எல்ஏ பரமசிவம் பங்கேற்றார். பழனியில் தனியார் மண்டபத்தில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அதிமுக சார்பில், பழனி சட்டமன்ற தொகுதி நிர்வா கிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். இதற்கு பழனி நகர அதிமுக செயலாளர் யூ முருகானந்தம் தலைமை வகித்தார். இதில் திண்டுக்கல் மாவட்ட பொருளாளர் கே எஸ் என் வேணுகோபால் முன்னிலை வகித்தார். முன்னாள் எம்பி குமாரசாமி சிறப்பு உரையாற்றினார். அதன் பின்பு திண்டுக்கல் மேற்கு இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் ராஜா முகமது, முன்னாள் ஒன்றிய செயலாளர் ஆறுமுகம், மேற்குஒன்றிய செயலாளர் நடராஜன், ஆயக்குடி பேரூர் செயலாளர் சசிகுமார், நிர்வாகிகள் பண்ணாடி ராஜா, வழக்கறிஞர் ஏடிஎஸ் சிவராஜ பிரபு, ஸ்வீட் கடை எம்ஜிஆர் கருப்புசாமி, இரா சந்திரன், நெய்க்காரப்பட்டி ராதாகிருஷ்ணன், முன்னாள் கவுன்சிலர் சுராங்கனி கணேசன், தாராபுரம் பெரியசாமி,ப.இ.தண்டபாணி, ஆ மு மாரப்பன், பால்ராஜ், ஐ.இ.சரவணன், வர்த்தக அணி பாலகிருஷ்ணன், சங்கர் அண்ட் கோ எஸ் குமார், அரிமா ஏ சுந்தரம், பூக்கடை சாதிக், நகரத் துணைச் செயலாளர் முருகன், சிவசுப்பிரமணி, செல்வக்குமார், முத்துக்குமார், சக்திவேல், வீரமணி, பிரவீன் குருசாமி, ஆயக்குடி கலீல் ரகுமான், எஸ் கார்த்திகேயன், டெய்லர் கணேசன், சரவணன், அப்துல் காதர், ரஞ்சித், வழக்கறிஞர் சேனாபதி, கணேசமூர்த்தி, வெங்கட்ராமன், மானூர் முருகேசன், கவுன்சிலர் ராஜூ, சத்யா நகர் நாகராஜன், ஒட்டுநர் மாதவ துரை, ஆர் எம் டி சி கதிர்வேல், உட்பட மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம்!



நாமக்கல், மே. 23–

நாமக்கல் மாவட்ட அதிமுக செயலாளராகவும், கட்சியின் அமைப்பு செயலாளராகவும் முன்னாள் அமைச்சர் தங்கமணி இருந்தார். அவர் வேலுமணி, சண்முகம் தரப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இதையடுத்து அவரை கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விடுவித்து பொதுச்செயலாளர் இபிஎஸ் அறிவித்துள்ளார். மேலும், நாமக்கல் அதிமுக மாநகர செயலாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான பாஸ்கர் மாவட்ட செயலாளராக அறிவிக்கப்பட்டார். இதனால் நாமக்கல் மாவட்ட அதிமுகவில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில், நாமக்கல் மாவட்ட அதிமுக அலுவலகத்தில் நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. புதிதாக மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றுள்ள பாஸ்கர் பங்கேற்று பேசினார். முன்னாள் அமைச்சர் சரோஜா, முன்னாள் எம்எல்ஏக்கள் சந்திரசேகரன், கலாவதி உள்பட கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முன்னாள் அமைச்சர் தங்கமணி மற்றும் அவரது ஆதரவாளர்களான பரமத்தி வேலூர் தொகுதி அதிமுக எம்எல்ஏ சேகர், திருச்செங்கோடு முன்னாள் எம்எல்ஏ பொன்சரஸ்வதி உள்ளிட்ட பலர் கூட்டத்தில் பங்கேற்காமல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

# நீட் தேர்வுக்கு குறுகிய கால பயிற்சி தொடக்கம்!



சென்னை, மே. 23–

தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நீட் தேர்வுக்கான குறுகிய கால பயிற்சி முகாம் சனிக்கிழமை (மே 23) முதல் ஜூன் 11–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதாக பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்பு மாணவர்கள் சனிக்கிழமைதோறும் வரவழைக்கப்பட்டு உயர்கல்வி சார்ந்த போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதைத் தொடர்ந்து நீட் தேர்வில் பங்கேற்கும் அனைத்து அரசு, அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் நீட் தேர்வுக்கான குறுகிய கால பயிற்சி முகாம் மே 23 முதல் ஜூன் 11–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த முகாமில் மாணவர்கள் நீட் தேர்வுக்கு தயாராகும் வகையில் பாட வாரியாக பயிற்சிகள், மாதிரித் தேர்வுகள் மற்றும் கல்வியியல் நிபுணர்களின் வழிகாட்டுதல்கள் வழங்கப்படவுள்ளன. பயிற்சி வகுப்பில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

ஆசிரியர்கள் தங்களுக்கான வகுப்புகள் ஒதுக்கீடு செய்யும் நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை முகாம் நடைபெறும் பள்ளிகளில் இருக்க வேண்டும். முகாமில் பங்கேற்கும் மாணவர்களுக்கு மதிய உணவு, சிற்றுண்டி வழங்கப்படும். இந்த குறுகிய கால பயிற்சி முகாமில் மாணவர்கள் விடுப்பின்றி தொடர்ச்சியாகப் பங்கேற்பதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும். அதேபோல மாணவர்கள் கட்டாயம் பள்ளிச் சீருடை, அடையாள அட்டை அணிந்து வர வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் நீட் தேர்வு தொடர்பாக மாதிரித் தேர்வுகள், கலந்துரையாடல்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 22 ஐஏஎஸ் அதிகாரிகள் மாற்றம்!

சென்னை, மே. 23–

தமிழகத்தில் 22 ஐஏஎஸ் அதிகாரிகளை மாற்றி தலைமை செயலாளர் சாய்குமார் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து தமிழக தலைமை செயலாளர் சாய்குமார் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறி இருப்பதாவது:–

| பெயர் | பழைய பதவி | புதிய பதவி |
|---|---|---|
| சந்தியா வேணுகோபால் சர்மா | தொழில் வளர்ச்சி கழக செயலாளர் | திட்ட வளர்ச்சி துறை செயலாளர் |
| குமரகுருபரன் | சென்னை மாநகராட்சி ஆணையர் | வணிகவரி, பத்திரப்பதிவு மற்றும் அறநிலையத்துறை |
| சொர்ணா | சுற்றுலா துறை செயலாளர் | சிறப்பு அமலாக்கத்துறை செயலாளர் |
| சந்தீப் நந்தூரி | தொழில் வளர்ச்சி கழக மேலாண் இயக்குனர் | முதலீட்டு மேம்பாட்டு, வணிகதுறை செயலாளர் |
| பிரகாஷ் | சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் | வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை துறை ஆணையர் |
| ஷோபனா | எழுது பொருள் அச்சுத்துறை ஆணையர் | ஜவுளித்துறை ஆணையர் |
| ஷில்பா பிரபாகர் | வணிகவரித்துறை செயலாளர் | தொழிலாளர் துறை ஆணையர் |
| கிரண் குராலா | போக்குவரத்து துறை ஆணையர் | நகர்ப்புற, ஊரக திட்டத்துறை ஆணையர் |
| விஜயகார்த்திகேயன் | (விடுமுறையில் இருந்தார்) | மீன்வளத்துறை மேலாண் இயக்குநர் |
| மகேஷ்வரி ரவிக்குமார் | கைத்தறி துறை இயக்குநர் | சமூக நலத்துறை இயக்குனர் |
| செந்தில்ராஜ் | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக மேலாண் இயக்குனர் | ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் |
| பாஸ்கர் பாண்டியன் | தமிழ்நாடு சாலை திட்டம் (சென்னை-கன்னியாகுமரி தொழிற்சாலை காரிடார் திட்ட இயக்குனர்) | போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை இயக்குநர் |
| சாருஶ்ரீ | (விடுமுறையில் இருந்தார்) | கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநர் |
| ரவிக்குமார் | கரூர் மாவட்ட கலெக்டர் | திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் |
| ஆஷா அஜித் | தமிழ்நாடு கிராம உருவாக்க திட்ட தலைமை செயல் அதிகாரி | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற துறை இயக்குனர் |
| கிறிஸ்துராஜ் | டாஸ்மாக் மேலாண் இயக்குனர் | நிலஅளவை மற்றும் செட்டில்மென்ட் இயக்குனர் |
| பி.கார்த்திகேயன் | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழக செயலாளர் |
| டி.ஜி.வினய் | சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று மேலாண் இயக்குனர் | தமிழ்நாடு பசுமை மின்சார கழக மேலாண் இயக்குனர் |
| அனிஷ்சேகர் | தமிழ்நாடு பசுமை மின்சார கழக மேலாண் இயக்குனர் | தேசிய சுகாதார மிஷன் இயக்குனர் |
| சஞ்ஜிவனா | தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டு கழக இயக்குநர் | தமிழ்நாடு ஊரக உருவாக்க திட்ட தலைமை அதிகாரி, பெண்கள் வேலை வாய்ப்பு, பாதுகாப்பு திட்ட இயக்குநர் |
| எஸ்.ஏ.ராமன் | தொழிலாளர் துறை ஆணையர் | மாநில தொழில் வளர்ச்சி கழக மேலாண் இயக்குநர் |
| லலிதா தித்யா | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துறை கூடுதல் ஆணையர் | சேலம் மாநகராட்சி ஆணையர் |

# 10 நாட்களில் 3-வது முறையாக உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை: பொதுமக்கள் கவலை!



டெல்லி, மே. 23–

நாடு முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் விலை மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 10 நாட்களில் மட்டும் எரிபொருள் விலை உயர்த்தப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

மே. 23–ல் (சனிக்கிழமை) முதல் அமலுக்கு வந்துள்ள இந்த விலை உயர்வின்படி, பெட்ரோல் விலை லிட்டருக்கு 87 பைசாவும், டீசல் விலை லிட்டருக்கு 91 பைசாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிரடி உயர்வால் சென்னையில் பெட்ரோல் ஒரு லிட்டர் ரூ.105.31க்கும், டீசல் விலை ஒரு லிட்டர் ரூ.96.98க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் நீடித்து வரும் போர் மற்றும் பதற்றமான சூழல் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த கூடுதல் சுமையைக் குறைக்கும் வகையில், அரசுக்கு சொந்தமான பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் கடந்த மே 15 முதல் எரிபொருள் விலையை படிப்படியாக உயர்த்தத் தொடங்கியுள்ளன.

கடந்த மே 15–ஆம் தேதி லிட்டருக்கு அதிரடியாக ரூ. 3 உயர்த்தப்பட்ட நிலையில், அதனைத் தொடர்ந்து மே 19 அன்று 90 பைசா உயர்த்தப்பட்டது. தற்போது மூன்றாவது முறையாக விலை ஏறியுள்ளது. இதன் மூலம் கடந்த 10 நாட்களில் மட்டும் பெட்ரோல், டீசல் விலை ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 5 ரூபாய் வரை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொடர் விலை உயர்வு காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்; 461 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

விளம்பர எண்: 734 அறிவிப்பு எண். 04/ 2026 தேதி: 20.05.2026

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

பணி நியமன வகை: நிரந்தரம்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 461 ஒருங்கிணைந்த தொழில்நுட்ப சேவைத் தேர்வு (நேர்காணல் அல்லாத) பணியிடங்கள்

பணியிட மாற்றம்: தமிழ்நாடு

தொடங்கும் தேதி: 27.05.2026

கடைசி தேதி: 25.06.2026 இரவு 11:59 மணி

விண்ணப்பிக்கும் முறை: இணையவழி

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tnpsc.gov.in/



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலம் பள்ளி வாகனங்களுக்கான கூட்டாய்வு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி. சந்தீஷ், வட்டார போக்குவரத்து அலுவலர் (பொ) கருப்பண்ணன் மற்றும் முதன்மை கல்வி அலுவலர் எல்.ரெஜினி ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# தொடர்ந்து குறைந்து வரும் தங்கம் விலை!



சென்னை, மே. 23–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.1,17,840–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து ரூ.14,730–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.295–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 95 ஆயிரத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இந்தியா-சைப்ரஸ் இடையே 6 ஒப்பந்தங்கள் கையெழுத்து!

புதுடெல்லி, மே. 23–

சைப்ரஸ் நாட்டின் அதிபர் கிறிஸ்டோடோலிடிஸ், பிரதமர் மோடி பேச்சு வார்த்தையை தொடர்ந்து இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. புத்தாக்கம், தொழில்நுட்பம், கல்வி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் ஆழமான ஒத்துழைப்பை வழங்குவதற்காக இரு தரப்பினரும் 6 ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.



பயங்கரவாத எதிர்ப்புக்கான ஒரு கூட்டுப் பணிக் குழுவை அமைப்பது குறித்த ஒப்பந்தமும் இதில் அடங்கும்.

மேலும், இடம் பெயர்வு மற்றும் இயக்கம் குறித்த ஒரு விரிவான கூட்டாண்மையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவும் ஒப்புக்கொண்டனர். தொடர்ந்து இருதரப்பும் இணைந்து 5 ஆண்டு கால பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான திட்ட வரைவை வெளியிட்டன.

# நீட் மறு தேர்வு: 100 சதவீதம் தவறு இன்றி நடைபெறும்: மத்திய மந்திரி உறுதி!

புதுடெல்லி, மே. 23–

நாடு முழுவதும் கடந்த 3–ந்தேதி நடத்தப்பட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத்தேர்வு, வினாத்தாள் கசிவு காரணமாக ரத்து செய்யப்பட்டது. இந்த முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணையும் நடத்தி வருகிறது. ரத்து செய்யப்பட்ட நீட் தேர்வுக்குப் பதிலாக அடுத்த மாதம் (ஜூன்) 21–ந்தேதி மறுதேர்வு நடத்தப்படும் என தேசிய தேர்வு முகமை அறிவித்து இருந்தது.

இந்த தேர்வை 100 சதவீதம் தவறில்லாமல் நடத்த அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். டெல்லியில்



நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டதால் 22 லட்சத்துக்கு அதிகமான மாணவர்கள் மனவேதனையில் உள்ளனர். அந்த வேதனையைப் புரிந்துகொண்டு பொறுப்பேற்று, நான் இன்று இதைச் சொல்கிறேன். நாங்கள் சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அந்த தேர்வில் சில மதிப்பீடுகளில் சமரசம் செய்யப்பட்டு இருந்ததால் அதை ரத்து செய்ய வேண்டியிருந்தது. கல்வி முறையில் முறைகேடுகளில் ஈடுபடுவோர் மற்றும் தேர்வு மாபியாவின் சதியால், ஒரு மாணவர் கூட தங்களுக்குரிய இடத்தை இழப்பதை நாங்கள் விரும்பவில்லை.

இந்த விவகாரத்தில் நாங்கள் விமர்சனங்கள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு வருகிறோம். அதை ஏற்கிறோம். ஆனால் இந்த அமைப்பை சரி செய்வது எங்கள் பொறுப்பு. இந்த பிரச்சினையில் கண்ணை மூடிக்கொண்டு இருப்பது எங்கள் பணி அல்ல. எனவே அடுத்த மாதம் 21–ந்தேதி நடைபெறும் நீட் மறுதேர்வை எந்தவித தவறும் இன்றி சீராக நடத்துவதில் அரசு உறுதியுடன் இருக்கிறது. அதை 100 சதவீதம் பிழையின்றி நடத்துவது எங்கள் பொறுப்பு. இவ்வாறு தர்மேந்திர பிரதான் கூறினார்.

# அரசு அலுவலகங்களில் அத்துமீறும் த.வெ.க.,வினருக்கு முதல்வர் விஜய் எச்சரிக்கை!

சென்னை, மே 23–

'அரசு சார்ந்த விவகாரங்களில், தமிழக வெற்றிக் கழகத்தினர் தலையிடுவதும், ஆய்வுகள் மேற்கொள்வதும் கூடாது' என, அக்கட்சியின் பொதுச்செயலரும் அமைச்சருமான ஆனந்த் அறிவுறுத்தி உள்ளார். முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க., கூட்டணி அரசு அமைத்த நாளில் இருந்து, அந்த கட்சியின் நிர்வாகிகள், தமிழகம் முழுதும் ஆய்வு என்ற பெயரில், அரசு அலுவலகங்களுக்கு செல்கின்றனர். அதை வீடியோவாக எடுத்து, சமூக வலைதளங்களில் பதிவு செய்கின்றனர். இதை யடுத்து அவர்களை முதல்வர் விஜய் எச்சரித்துள்ளார். இந்நிலையில், த.வெ.க., மாவட்ட செயலர்களின், 'வாட்ஸாப்' குழுவில் அமைச்சர் ஆனந்த் அனுப்பிய அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:



தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தலைமையில், மனசாட்சியுள்ள மக்களாட்சி அமைந்துள்ளதை, மக்கள் மனங்குளிர்ந்து வரவேற்று மகிழ்கின்றனர். இச்சூழலில், நமக்கான பொறுப்புணர்வு பலமடங்கு அதிகரித்துள்ளது. நம் கட்சி தொடங்கப்பட்டதன் நோக்கமே, மக்களுக்கு சேவை செய்யத்தான்.

எனவே கட்சியினர், பொறுப்புணர்வுடன் ஈடுபட வேண்டும்; தங்களின் எல்லை என்ன என்பதை அறிந்து செயல்பட வேண்டும். கட்சிக்கும், முதல்வர் விஜய்க்கும் எவ்விதத்திலும் களங்கம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் அல்லாத நம் கட்சியினர், அரசு சார்ந்த விவகாரங்களில் தலையிடுவதும், ஆய்வுகள் மேற்கொள்வதும் அறவே கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி பிளஸ் 2 மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 25-ந்தேதி தேதி தீர்ப்பு!

தூத்துக்குடி, மே. 23–

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 12 ஆம் வகுப்பு மாணவி கடந்த மார்ச் 10 ஆம் தேதி வீட்டில் இருந்து இரவு வேளையில் அருகே உள்ள காட்டுப் பகுதிக்கு இயற்கை உபாதைக் கழிக்க சென்ற நிலையில், காணாமல் போனார். கிராம மக்கள் மற்றும் உறவினர்கள் ஒரு நாள் முழுவதும் தேடிய நிலையில், கடந்த 11 ஆம் தேதி அதே காட்டுப் பகுதியில் உடலில் பல்வேறு இடங்களில் காயத்துடன் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்தபட்டதற்கான அறிகுறிகளுடன் மாணவி உடல் சடலமாக மீட்கப்பட்டது. இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் பரபரப்பை





ஏற்படுத்தி வருகிறது.

பல்வேறு கட்ட விசாரணைகளுக்கு பிறகு ரவுடி தர்ம முனீஸ்வரன் என்பவர் இந்த கொலையை செய்ததாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட தர்ம முனீஸ்வரன் ஏற்கனவே கோவில்பட்டியில் ஒரு வயதான மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர் ஆவார். அந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தில் நிபந்தனை ஜாமின் பெற்று, தினமும் நீதிமன்றத்தில் கையெழுத்திட்டு வந்த நிலையில்தான் பிளஸ்–2 மாணவியையும் கொடூரமாகக் கொலை செய்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை தூத்துக்குடி போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கில் அனைத்து தரப்பு விசாரணைகளும் தற்போது முடிவடைந்துள்ளது. இந்த நிலையில், வழக்கின் தீர்ப்பை வருகிற 25–ந்தேதி (திங்கட்கிழமை) அறிவிக்க உள்ளதாக தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# வாகனங்களில் கண்காணிப்பு கருவி பொருத்தும் திட்டம் - அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை!

சென்னை, மே. 23–

போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தலைமையில், தமிழ்நாட்டில் பயணிகள் வாகனங்கள் மற்றும் பொது போக்குவரத்து வாகனங்களில் (Public Service Vehicles) AIS–140 VLTD பொருத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், லாரி உரிமையாளர் சங்கங்கள், பள்ளி வாகன உரிமையாளர்களிடமிருந்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் VLTD சாதனங்களின் விலை தொடர்பாக தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாட்டில் தனியார் பயணிகள் வாகனங்கள் மற்றும் பொது போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்பவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு AIS–140 VLTD எனும் GPS வசதியுடன் கூடிய கண்காணிப்பு கருவிகளை பொருத்துவதில், வாகன உரிமையாளர்கள் பயனடையும் வகையில் VLTD சாதனங்களின் விலையை சீராகவும் மற்றும் நியாயமாகவும் நிர்ணயம் செய்திட உற்பத்தி நிறுவனங்கள் முன்வர வேண்டும் என உற்பத்திநிறுவனங்களின் பிரிதிநிதிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், VLTD தொடர்பாக வாகன உரிமையாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த போக்குவரத்துத் துறை அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். மேலும் ,VLTD சாதனங்களின் தொழில்நுட்ப அம்சங்கள், கட்டுப்பாட்டு அறை ஒருங்கிணைப்பு மற்றும் AIS–140 திட்டத்தின் செயலாக்க நிலை குறித்து விவாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் முன்னிலையில் AIS–140 VLTD சாதனங்களின் தொழில்நுட்ப அம்சங்கள், கட்டுப்பாட்டு அறை ஒருங்கிணைப்பு மற்றும் செயலாக்க முறை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# எஸ்.பி.ஐ. வங்கி வேலைநிறுத்தம்!

சென்னை, மே. 23–

நாடு முழுவதும் உள்ள எஸ்.பி.ஐ (SBI) வங்கி ஊழியர்கள் மே 25, 26 ஆகிய தேதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதாக அறிவித்துள்ளனர். ஊழியர்களை தற்காலிகமாக அன்றி நிரந்தரமாக பணியமர்த்துதல், தேசிய ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கான ஓய்வூதிய நிதி மேலாளர் தேர்வில் மாற்றம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து எஸ்பிஐ வங்கி தமது அதிகாரப்பூர்வ எக்ஸ் பதிவில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு உள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது:–





* அகில இந்திய பாரத ஸ்டேட் வங்கி ஊழியர் சம்மேளனம் மே 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் 2 நாள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

* அனைத்து வங்கிகளின் கிளைகளில் வாடிக்கையாளர்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகளை தடையின்றி வழங்க நாங்கள் முழு முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

* அதே வேளையில், வாடிக்கையாளர்கள் தங்களின் பணத்தேவை களுக்கு ஏடிஎம்கள், தானியங்கி டெபாசிட் இயந்திரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

* வாடிக்கையாளர்கள் சேவை மையத்தை அணுக வேண்டும்.

* இணைய வங்கி சேவை, யோனோ(YONO), மொபைல் வங்கி சேவை, யுபிஐ மற்றும் பிற டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இவ்வாறு அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளது.

மே மாதம் 23ம் தேதி சனிக்கிழமை. மாதத்தின் 4வது சனிக்கிழமை என்பதால் அன்றைய தினம் வங்கிகள் இயங்காது. மே 25 ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாகும்.

மே 25 மற்றும் 26 தேதிகள் வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த இரு நாட்களும் வங்கிப்பணிகள் இருக்காது. மே 27 புதன்கிழமை பக்ரீத் விடுமுறை என்பதால் அன்றும் வங்கிச்சேவைகள் இருக்காது. ஒட்டு மொத்தமாக, மே 23 முதல் மே 27 வரை 5 நாட்கள் வங்கிகள் இயங்காது என்பதால் எஸ்.பி.ஐ வங்கி சேவைகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# தேசிய நெடுஞ்சாலைகளில் 3% - 7% வரை சுங்கக் கட்டண உயர்வு!

சென்னை, மே. 24–

சட்டமன்றத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமிழகத்தின் சுமார் 60 தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளுக்கான திருத்தப்பட்ட சுங்கக் கட்டண உயர்வு, சனிக்கிழமை முதல் அமலுக்கு வருகிறது. இதனால் முக்கிய நகரங்களுக்கு இடையேயான சாலைப் பயணச் செலவுகள் அதிகரிக்கவுள்ளன.


இந்த சுங்கச்சாவடிகளில் பெரும்பாலானவை சென்னையின் புறநகர்ப் பகுதிகள் மற்றும் முக்கிய வழித்தடங்களில் அமைந்துள்ளன. இதில் திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள பரனூர் மற்றும் ஆத்தூர் சுங்கச்சாவடிகளும், தாம்பரம் புறவழிச்சாலையில் உள்ள வானகரம் சுங்கச்சாவடியும் அடங்கும். இது தவிர, சென்னை புறவழிச்சாலை வழித்தடத்தில் உள்ள சூரப்பட்டு மற்றும் நல்லூர், சென்னை–திருப்பதி நெடுஞ்சாலையில் உள்ள பட்டறைபெரும்புதூர் மற்றும் தெற்குப் பகுதிகளில் உள்ள சமயபுரம், கப்பலூர் மற்றும் நாங்குநேரி ஆகிய முக்கிய சுங்கச்சாவடிகளிலும் இந்த கட்டண மாற்றம் செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அருகே உள்ள பரனூர் சுங்கச்சாவடியில் கார்களுக்கான கட்டணம் மாற்றமின்றி ரூ.75 ஆகத் தொடர்கிறது, ஆனால் பெரிய வாகனப் பிரிவுகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) ஆண்டு மொத்த விலை குறியீட்டுடன் இணைக்கப்பட்ட திருத்த வழிமுறையின் கீழ், இந்த தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளுக்கான கட்டண உயர்வு 3% முதல் 7% வரை உள்ளது. இந்த கட்டண மாற்றத்தைத் தொடர்ந்து, சென்னை மற்றும் மதுரை இடையே பயணிக்கும் ஒரு கார் இருமார்க்கப் பயணத்திற்கு சுமார் ரூ.80 கூடுதலாகச் செலுத்த வேண்டியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில், சென்னை–கோயம்புத்தூர் பயணத்திற்கான கூடுதல் சுங்கக் கட்டணச் சுமை சுமார் ரூ.100 ஆக இருக்கும். திருச்சி–சேலம் இருமார்க்கப் பயணத்திற்கு, பயணிக்கும் வழித்தடத்தைப் பொறுத்து கார்களுக்கு ரூ.40 முதல் ரூ.50 வரை கூடுதலாகச் செலவாகலாம். இந்த கட்டண உயர்வு, கோடைகால விடுமுறை காலத்தில் டாக்ஸிகள் மற்றும் சுற்றுலா வேன்களின் கட்டணங்களையும் உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஷாப்பிங்கில் வாங்கிய பொருளை சுமக்க கேரி மேன் வந்தாச்சு..!

புதுடெல்லி, மே. 23–

தலைநகர் டெல்லியின் பரபரப்பான மார்க்கெட்டுகளில் ஷாப்பிங் செய்பவர்களின் சுமையைக் குறைக்கும் வகையில், வாடிக்கையாளர்களின் பைகளை சுமந்து செல்லும் "கேரி மேன் என்ற புதிய மற்றும் வினோதமான சேவைகள் அதிகாரப்பூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள லஜ்பத் நகர் போன்ற பிரம்மாண்டமான மற்றும் மக்கள் கூட்ட நெரிசல் அதிகம் உள்ள மார்க்கெட்டுகளில் மக்கள் மணிக்கணக்கில் நடந்து ஷாப்பிங் செய்வது வழக்கம். அப்படி வாங்கும் அதிகப்படியான பொருட்களைக் கைகளில் சுமந்து கொண்டு அடுத்தடுத்த கடைகளுக்குச் செல்வது பெரும் சிரமமாக இருக்கும்.





இந்த இன்னலைத் தீர்க்க,"கேரி மேன்" நிறுவனத்தின் மூலம் பிரத்யேகமாக பயிற்சி அளிக்கப்பட்ட உதவியாளர்கள் உங்களுடன் மார்க்கெட்டிற்கு வருவார்கள். நீங்கள் வாங்கும் அனைத்துப் பைகளையும் அவர்கள் சுமந்து கொள்வார்கள், இதனால் நீங்கள் கைகளில் எந்த எடையும் இல்லாமல் நிம்மதியாக ஷாப்பிங் செய்யலாம்.

இந்த சேவை குறிப்பாக வயதானவர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் ஷாப்பிங் வரும் பெற்றோர்கள் ஆகியோர்க்கு மிகவும் உதவியாக இருக்கும் என்ற நோக்கில் கொண்டு வரப்பட்டது. மேலும் பண்டிகைக் காலங்களில் அதிகளவில் திருமண ஷாப்பிங் செய்பவர்களுக்கு ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

தற்போது இந்த சேவையின் முதற்கட்டமாக டெல்லியில் உள்ள லஜ்பத் நகரில் தொடங்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. விரைவில் சாந்தினி சவுக் போன்ற பிற பகுதிகளிலும் இந்த சேவை விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இந்த சேவைக்கு நேரத்தின் அடிப்படையில் மிக குறைந்த கட்டணம் வசூலிக்கப்படு கின்றன.

30 நிமிட பேக்கேஜ் ரூ.79, 1 மணி நேரம் பேக்கேஜ் ரூ.149 என்ற அடிப்படையிலும் ஒரு நபர் சுமார் 12 கிலோ எடை உள்ள பைகளை சுமப்பர். பைகளை சுமப்பது மட்டு மில்லாமல், நீண்ட வரிசைகளில் நிற்பது, வெயில்/மழையிலிருந்து பாதுகாக்கக் குடை பிடிப்பது மற்றும் மொபைல் சார்ஜிங் வசதி போன்ற கூடுதல் வசதிகளையும் இவர்கள் வழங்குகின்றனர்.

பொதுமக்கள் தங்கள் பொருட்களை நம்பி ஒப்படைக்கும் வகையில், இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரும் காவல்துறை சரிபார்ப்பு செய்யப்பட்டவர்கள் ஆவர். மேலும், அவர்கள் அனைவரும் பிரத்யேக சீருடை மற்றும் அடையாள அட்டை அணிந்திருப்பார்கள்.

இந்த சேவையை பெற கேரி மேன் சர்வீசஸ் என்ற இணைய தளம் மூலம் முன்பதிவு மற்றும் கட்டண விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது டெல்லிவாசிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. ஜிப்டோ, ஸ்விகி என்ற வரிசையில் இப்போது கேரி மேனும் சந்தையில் நுழைந்துள்ளது. இது போக போக முக்கிய தலை நகரங்களில் விரிவடைய கூடும் என்று நம்பப்படுகிறது.

# அனிதா ராதாகிருஷ்ணனை மீண்டும் வளைக்கும் இ.டி.!

சென்னை, மே. 24–

தி.மு.க முன்னாள் அமைச்சர், அனிதா ராதாகிருஷ்ணன் மீது பணமோசடி வழக்கு ஒன்றில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை நடந்ததாக அமலாக்கத்துறை குற்றம்சாட்டியுள்ளது. இந்த நிலையில், அவர் மீதான வழக்கில் விசாரணை நடத்துவதற்கு அனுமதி கோரி, தமிழக அரசுக்கு அமலாக்கத்துறை கடிதம் அனுப்பியுள்ளதாகத்



தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக, முந்தைய தி.மு.க ஆட்சியின் போது அனிதா ராதாகிருஷ்ணனை விசாரிக்க அனுமதிக்குமாறு தமிழக அரசுக்கு அமலாக்கத்துறை கடிதம் அனுப்பியிருந்தது. இருப்பினும், அவரை விசாரிக்க அமலாக்கத்துறைக்கு அப்போதைய திமுக அரசு அனுமதி வழங்கவில்லை. இந்த நிலையில், அனிதா ராதாகிருஷ்ணனை விசாரிக்க அனுமதி கோரி, தற்போதைய தவெக தலைமையிலான தமிழக அரசுக்கு அமலாக்கத்துறை மீண்டும் கடிதம் எழுதியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020